3. சிறப்புக் கவன ஈர்ப்பு.

(அ) குரோம்பேட்டை பகுதியில் ஸ்ரீராம ஆஞ்சநேயர் கோவில் கட்ட கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானம். ஒத்திவைப்புத் தீர்மானம் என்று இரண்டு மூன்று பிரச்சினைகள் பற்றிக் கொடுத்திருந்த காரணத்தால், எல்லாம் சிறப்புக் கவன ஈர்ப்பாகவே மாற்றப்பட்டிருக்கிறது. எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. எஸ். டேனியல்ராஜ் அவர்கள் இரண்டு பிரச்சினைகளைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். கோயில் குறித்த பிரச்சினை பற்றியும், வியாபாரிகள் போராட்டம் பற்றியும் கொடுத்திருக்கிறார். கோயில் பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறார்கள். ஆகவே, கோயில் பிரச்சினை பற்றி முதலிலே எடுத்துக் கொள்ளலாம். கோயில் பிரச்சினையில் திரு. சி. ஞானசேகரனும் அறிவிப்புக் கொடுத்து இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. எஸ். டேனியல்ராஜ்.

பிற்பகல் 12—25

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் சானடோரியத்தில் கடந்த 47 ஆண்டுகளாக சீரும் சிறப்புமாக நடைபெற்று வந்த ஸ்ரீராம ஆஞ்சநேயர் திருக்கோயிலை அந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் அவர்கள் எந்தவித முன் அறிவிப்பும் இன்றி இடித்ததன் காரணமாக, அந்தப் பகுதியிலுள்ள இந்து சமய பக்தர்களுடைய மன நிலையை அறிந்து அந்தக்கோயிலை மறுபடியும் முழுமையாகக் கட்டுவதற்கு இலவசமாக இடத்தையும் முழுமையாகக் கட்டுவதற்குரிய முழுத் தொகையையும் வழங்குவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டப் பேரவையிலே அறிவித்தார்கள். இந்து சமய அறநிலையத்துறையின் மூலமாக சுமார் 28 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்து அந்தக் கோயிலை முழுமையாகக் கட்டுவதற்கு நிதி ஒதுக்குமாறு அரசிற்கு அனுப்பப் பட்டுள்ளது. ஆனால் செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவரவர்கள் அந்தக் கோயிலினுடைய நிர்வாகிகளை அழைத்து 7 இலட்சம் ரூபாய் இந்தக் கோயிலைக் கட்டுவதற்கு அரசு ஒதுக்கியிருக்கிறது; அதைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அவர்கள் கூறிஇருக்கிறார்கள். 7 இலட்சம் ரூபாயை வைத்துக்கொண்டு அந்தக் கோயிலை அவர்களால் முழுமையாகக் கட்ட முடியாது என்று தெரிவிக்கிறார்கள்.

ஆகவே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சட்டமன்றத்திலே அறிவித்த உறுதிமொழியின் அடிப்படையிலே இந்து சமய அறநிலையத் துறையினர் மதிப்பீடு செய்துள்ள 28 இலட்சம் ரூபாயையும் நிதி ஒதுக்கீடு செய்து அந்தக் கோயிலை முழுமையாக அவர்கள் கட்டுவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டேனியல்ராஜ் மற்றும் திரு. ஞானசேகரன் ஆகியோர் குறிப்பிட்ட ''ஸ்ரீராம ஆஞ்சநேயர் கோயிலை'' ஏற்கனவே இருந்த இடத்திற்கு அருகில், வேறு ஒரு இடத்தில் மீண்டும் கட்டித் தருவதற்காகத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும், இந்த அரசு எடுத்து வருகிறது என்பதை விவரமாக ஏற்கனவே இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறேன். மீண்டும் அவற்றை எல்லாம் எடுத்துரைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். இல்லாத பிரச்சனை ஒன்றை இருப்பது போல் சித்தரிப்பது நாகரீகமான அரசியல் எல்லையைக் கடந்த செய்கை என்று தான் கூறவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்தக் கோயிலில் ஒரு பகுதி இடிக்கப்பட்டது என்ற செய்தி எனக்குக் கிடைத்தவுடன், உடனடியாக அதை நிறுத்தி வைக்கச் செய்தேன். நெடுஞ்சாலையின் போக்குவரத்திற்கு இடையூறாக இருந்த ஸ்ரீராம ஆஞ்சநேயர் கோயிலையும் அதற்கு அருகிலிருந்த மசூதியையும் அதன் அறங்காவலர்கள் மற்றும் நிர்வாகிகளைக் கலந்து ஆலோசித்து மாற்று இடத்தை வழங்கி, மீண்டும் புதியதாகக் கோயிலையும், மசூதியையும் கட்டிக்கொள்ள நிதி உதவிகளையும் வழங்கினோம். ஸ்ரீராம ஆஞ்சநேயர் கோயில் கட்டுவதற்கு இலட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள 75 சென்ட் நிலத்தையும், மசூதி கட்டுவதற்கு 25 சென்ட் நிலத்தையும் வழங்கினோம். கோயில் கட்டுவதற்கு 7 இலட்சம் ரூபாயும், மசூதி கட்டுவதற்கு 5.2 இலட்சம் ரூபாயும், செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகப் படிப்படியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்தோம்.

ஸ்ரீராம ஆஞ்சநேயர் கோயிலின் நிர்வாகிகள், அந்தப் பழைய கோயிலின் மொத்த மதிப்பீட்டுத் தொகையான 27 இலட்சம் தொகையில் 50 சதவிகிதம் தங்களுக்குப் போதுமானது என்றும், எனவே, கூடுதலாக இன்னும் 7 இலட்சம் ரூபாய் வழங்கினால், அதை வைத்துக்கொண்டு, பொதுமக்களிடமிருந்து நன்கொடையையும் பெற்று, கோயிலைக் கட்டி முடிப்போம் என்றும் எழுதிக்

கொடுத்துள்ளார்கள். மக்களின் நியாயமான உணர்வுகளை எப்போதும் மதிக்கின்ற அரசு எங்கள் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அப்பகுதி வாழ் மக்களின் உணர்வுகளை மதிக்கின்ற வகையில், கூடுதலாக 7 இலட்சம் ரூபாயை சில திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேசையைத் தட்டும் ஒலி) ஆக, இந்தக் கோயிலைக் கட்டுவதற்கு, தற்போது மொத்தமாக 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும், மேலும் இக்கோயில் கட்டுவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்க இந்த அரசு தயாராக உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மேலும், எனது சொந்தப் பொறுப்பிலிருந்து, ஸ்ரீ ராம ஆஞ்சநேயர் கோயிலைக் கட்டும் திருப்பணிக்கு ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்க உள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மக்களின் மனமறிந்து செயல்பட வேண்டும் என்கின்ற எண்ணமும், உறுதியும் எங்களுக்கு இருக்கும் போது, இத்தகைய பிரச்சினைகளை எல்லாம் வெகு எளிதில் எங்களால் தீர்த்து வைக்க முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

சிதிலமடைந்து, கவனிப்பாரற்று பரிதாபமான சூழ்நிலையில் இருந்த, ஆயிரக்கணக்கான திருக்கோயில்களைச் சீரமைத்து, நமது கலாச்சாரத்தின் கலைக் களஞ்சியங்களான அவற்றை மீண்டும் புதுப்பித்துத் தந்தது எங்கள் அரசு. திருக்கோயில்களின் நிர்வாகத்திற்கென்றே ஒரு வாரியத்தையும் ஏற்படுத்தி திருக்கோயில்களின் புனரமைப்பிற்கும், நிர்வாகத்திற்கும், ஒரு கால பூஜையாவது நடத்துவதற்கும், ஏற்பாடு செய்வதற்கு ஒரு நிதியை உருவாக்கி, புதிய வரலாறு படைத்தவர்கள் நாங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்டவர்கள் ஸ்ரீராம ஆஞ்சநேயர் கோயிலைப் புதுப்பித்துக் கட்டுவதற்கு மற்ற எவரின் தூண்டுதலும் இல்லாமலே செயல்படும் எண்ணமும் உறுதியும் படைத்தவர்கள் என்பதை இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி). இந்தத் திருக்கோயில் திருப்பணி, விரைவில் மேற்கொள்ளப் படவும், கோயிலை விரைவில் நிர்மாணிக்கவும், எங்கள் அரசு முழு ஆதரவை அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1994 மே 5] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

பிற்பகல் 12-30

ஸ்ரீ இராம ஆஞ்சநேயரின் பெயரை வைத்து, அரசியல் ஆதாயம் தேடுகின்ற பணியில், யாராக இருந்தாலும், அவர்கள் ஈடுபடக்கூடாது என்ற எனது வேண்டுகோளை முன்வைத்து அமைகிறேன்.

5. அறிவிப்புகள்.

(அ) முதலமைச்சர் ஆலயப் புனரமைப்பு நிதிக்கு உறுப்பினர் திரு. எஸ் அண்ணாமலை ஊதிய நன்கொடை அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தத் திருக்கோயில் பற்றிச் சொன்ன காரணத்தினால், இன்னொரு செய்தியையும் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாமலை அவர்கள் சென்ற ஆண்டு, பேரவை பட்ஜெட் கூட்டத் தொடரின்போது ஒரு அறிவிப்பைச் செய்தார். ஆண்டுதோறும் எனக்குத் தருகின்ற சம்பளத்தை முழுமையாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கோயில் புனரமைப்பு நிதிக்கு வழங்குகிறேன் என்று அறிவித்திருந்தார். அந்த வகையில், சென்ற ஆண்டு, அவருடைய ஊதியத் தொகை ரூ. 30 ஆயிரத்தை வழங்கி இருந்தார். இன்றைக்கு, மீண்டும் அவருடைய, இந்த ஆண்டு ஓர் ஆண்டிற்குரிய சம்பளமான, ரூ. 30 ஆயிரத்திற்கான காசோலையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கோயில் புனரமைப்புப் பணிக்கு வழங்க வேண்டுமென்று என்னிடத்தில் வழங்கியிருக்கிறார். இந்த நேரத்தில், இந்தச் செய்தியையும் சொல்லி, அவரிடத்தில் இந்தக் காசோலையை வழங்குவது பொருத்தமாக இருக்கும் என்கிற காரணத்தினால், இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாமலை அவர்கள் சார்பில் வழங்குகிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அண்ணாமலை அவர்களுக்கு, தங்களின் வாயிலாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது அவர் மனமுவந்து அளித்துள்ள இந்த நிதி, ஸ்ரீ இராம ஆஞ்சநேயர் திருக்கோயிலின், திருப்பணிக்காக பயன்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).